**19.08.2025**

**O.S.No. 326/2019**

**வா.சா.2 : ஆண்டி**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் விழுப்புரம் மாவட்டத்தில் தாள் வெள்ளாளர் ஊரில் குடியிருக்கிறேன். வாதி அண்ணமாலை எனது அக்கா வீட்டுக்காரர். வாதி தேக்கம்பட்டு கிராமத்தில குடியிருக்கிறார். வாதி அண்ணமாலையின் அக்காவை நான் திருமணம் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் நிருபண வாக்குமூலத்தில உள்ள கையெழுத்து என்னுடையது தான். ஆனால் அதில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு எதற்காக போடப்பட்டது என்று தெரியுமா என்றால் பட்டா சொத்தை அபகரித்துக்கொண்டார். அதனால் வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்தின் பட்டா நம்பர் மற்றும் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளிவு விஸ்தீரணம் என்றால் 4-1/2 ஏக்கர், எந்தந்த சர்வே எண்ணில் எவ்வளவு ஏக்கர் என்றும் தெரியாது. 1970 க்கு முன்னர் தாவா சொத்திற்கு பட்டா கொடுத்துள்ளார்கள். 1970 க்கு முன்னர் தாவா சொத்தின் பட்டாவை வாதி நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். 1970 க்கு முன்னர் கல்வராயன்மலையில் உள்ள சொத்து ஜாகீர் சொத்து என்றும் அதை யாரும் பட்டா கொடுக்கப்படவில்லை என்றும் நான் வாதிக்காக அவ்வாறு பட்டா கொடுத்துள்ளதாக அவ்வாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.1970 க்கு முன்னர் தாவா சொத்து யார் பெயரிலும் இல்லை என்றால் சரிதான்.

2) அந்த ஊரில் லட்சுமணன், தீர்த்தான், அண்ணாமலை என்ற பெயரில் பல பேர்கள் உள்ளனர் என்றால் சரிதான். நடு கவுண்டர் என்ற பெயரில் உள்ள வேறொருவர் சொத்தை பெயர் ஒற்றுமை பயன்படுத்தி அண்ணாமலை தகப்பனார் பெயர் நடுகவுண்டார்என்பதால் பொய்யாக உரிமை கொண்டாடுகிறேன் என்றால்சரியல்ல. நான் திருமணம் செய்து 50 வருடங்கள் ஆகிறது. அண்ணாமலை வங்கியில் கடன் வாங்கியுள்ளார் என்று சொல்லி உள்ளேன். எந்த வங்கி என்று சொல்லவில்லை என்றால்

சரிதான். அண்ணாமலை எந்த வருடம் கூலி வேலைக்காக வெளியூர் சென்றார் என்றால் தெரியாது. அதுபோல நிருபண வாக்குமூலத்தில் தேதி வருடத்தை நான் சொல்லவில்லை. இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் பெயர் அண்ணாமலை, தீர்த்தான், மாது, வெங்கடேசன் ஆகியவர்களை பற்றி தெரியும். தீர்த்தான் என்பவரின் அப்பா பெயர் நடு கவுண்டர் என்றால் அது பொய். வாதி நோட்டிஸ் யாருக்கு அனுப்பினார் விவரம் எனக்கு தெரியாது. எந்த தேதியில் அனுப்பினார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட எந்த ஆவணங்களையும் நான் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. என்ன ஆவணம் பார்த்துள்ளேன் என்றால் பட்டாவை பார்த்துள்ளேன். பட்டா 1970 ல் கொடுத்தனர். நானும் மாமனும் சேர்ந்து வழக்கு போட்டுள்ளோம்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.08.19 05:58:51 +0530

**Subordinate Judge, Attur.**